[1993 பிப்ரவரி 9

அனைத்து ஆலைகளையும் நவீனபடுத்த வேண்டும் என்ற திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் குறிப்பாக சாரம் கூட்டுறவு நூற்பு ஆலைக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மின்வெட்டு 3 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. 3 ஆண்டு வட்டி இல்லாத கடன் மற்றும் வரிச்சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. காசு கடன் 120 லட்சத்திலிருந்து 150 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு சலுகைகளைத் தந்து இந்த நூற்பு ஆலைகள் லாபத்தினை ஈட்டி தருவதற்காக வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு தலைவர் அவர்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 29, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

29—

வெள்ளித்திருப்பூர்— ஆலாம்பாளையம் சாலையைப் பழுது பார்த்து அகலப்படுத்துதல்

* 10937—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, வெள்ளித் திருப்பூரில் இருந்து ஆலாம்பாளையம் வரை உள்ள சாலையைப் பழுது பார்த்து அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலையை பழுது பார்க்க சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு நிறைந்தவராய், நாள் நிறைந்தவராய், ஒப்புயர்வு நிறைந்தவராய், கண்ணோட்டம் நிறைந்தவராய், வாய்மை நிறைந்தவராய், கல்வி கேள்விகளில் சிறந்தவராய், அறிவால் உயர்ந்தவராய், ஆக்கத்தால் மேம்பாடு கண்டவராய், தனக்கென்று வாழாமல், இந்த தமிழ்ச் சமுதாயத்திற்காக வாழ்கிற ஒப்பற்றத் தலைவி புரட்சித்

தலைவி ஆட்சிக் காலத்தில் (மேசையைத்தட்டும் ஒலி)) எங்கள் பகுதிக்கு கடந்த 2 ஆண்டுகாலமாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நான் சேவல் சின்னத்திலே இருந்த போது கூட கேட்டபோதெல்லாம் இல்லை இல்லை என்று சொன்ன அந்த சர்க்காரும் இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் ஆளுகின்ற இந்த நேரத்தில் எங்கள் தொகுதியிலே நெடுஞ்சாலை துறை மூலமாகவும் கிராம நெடுஞ்சாலை துறை மூலமாகவும் ஏராளமான சாலை வசதிகளை வழங்கியிருக்கிறார்கள். இன்னும் சில சாலைகள் போட வேண்டியிருக்கிறது. அந்தச் சாலைகளை உடனே செய்வதற்கு ஆவன செய்வார்களா? எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாக அறிய விரும்புகிறேன். சிறந்த அமைச்சர்களில் ஒருவராக உள்ள இந்த அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற சாலைகளுடைய பணிகள் ஏறத்தாழ மொத்தம் $6\frac{1}{2}$ கிலோ மீட்டர். அந்த வேலைகளில் பாதி அளவுக்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை அகலப் படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு 14 லட்சம் ரூபாய் தேவைப்படும். அதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கச் சொல்லி இருக்கிறோம். படிப்படியாக 5 ஆண்டு காலங்களில் போடவேண்டும் என்று தான் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஓராண்டிற்கு 30 கோடி ரூபாய் என்று தனியாக -,- ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதி தவிர தனியாகத் தந்திருக்கிறார்கள். ஆகவே படிப்படியாக 5 ஆண்டு காலத்திற்குள், இந்த அரசு அடுத்த தேர்தலை சந்திப்பதற்குள் அனைத்து சாலைகளும் செப்பனிடப் படவேண்டும் என்பதுதா நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய விருப்பம். அந்த விருப்பத்திற்கு ஏற்ப ஒவ்வொரு ஆண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையிலே அந்தியூர் தொகுதியிலே பெரும்பாலான சாலைகளை எடுத்திருக்கிறோம். அந்த சாலைகள் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் வானிலே ஒரு விடி வெள்ளியாய், சமுதாயப் பாலைவனத்திலே ஒரு நீரூற்றாகவும், பழம் பெரும் புரட்சிகளால் பாழ்அடைந்த தாயகம் கண்ட மணிமண்டபமாகவும், பத்தரை மாற்றுத் தங்கமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய ஒப்பற்றத் தலைவியினுடைய ஆட்சி காலத்தில் இவ்வளவு தொகை ஒதுக்கியிருப்பதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி மட்டும் தானா கூடுதலாக வினா ஏதாவது கேட்கலாமே !

வினா எண் 30 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

30—

சேரன்மகாதேவி கன்னடியன் கால்வாய்

* 11743— திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேரன்மாகாதேவி தொகுதி, கன்னடியன் கால்வாயின் நடுவே மணல் மேடுகள் அதிகம் இருப்பதால் தண்ணீர்ப் போக்குவரத்துத் தடைபடுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் தாமிரபரணி உப திட்டத்தின் கீழ், கன்னடியன் கால்வாயில் மணல் மேடுகளை அகற்றும் பணி செய்யப்பட இருக்கிறது. இதற்காக பாளையங்கோட்டையில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்து 'புல்டோசர்' வாடகைக்கு எடுப்பதற்காக ரூ. 90,000 முன் பணமாக அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதம் அந்தப் பணி எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் எந்த அமைச்சரும் செய்யாத வியத்தகு சாதனைகள் பல புரிந்து, புரட்சித் தலைவி அவர்களுக்கு மேன்மேலும் புகழைச் சேர்க்கும் இந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்